**வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்**
**ந.க.எண்.4253/ஆ5/2023, நாள்.05.12.2023**

*****

பொருள் பள்ளிக் கல்வி – இலக்கிய மன்ற செயல்பாடுகள் – முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா – அனைத்து வகை பள்ளிகளிலும் – சட்டமன்ற நாயகர் – கலைஞர் அவர்களின் சட்ட மன்ற சாதனைகள் குறித்த போட்டிகள் நடத்துதல் – மாணவர்கள் விவரம் – கோருதல் – தொடர்பாக

பார்வை
1. சென்னை – 6, தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.45454/எம்/இ2/2023, நாள். 10.10.2023
2. இவ்வலுவலக இதே எண்ணிட்ட கடித நாள். 13.10.2023

*****

பார்வை 1–ல் காணும் பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகளின்படி, முத்தமிழ் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு அக்டோபர் – 2023 மாத பள்ளி இலக்கிய மன்ற செயல்பாடுகளின் ஒரு பகுதியாக சட்டமன்ற நாயகர் கலைஞர் அவர்களின் சட்டமன்ற சாதனைகள் குறித்த சொற்பொழிவு போட்டியினை நடத்திட அனைத்து வகை பள்ளிகளின் தலைமையாசிரியர்களுக்கு உரிய அறிவுரைகள் வழங்கப்பட்டது. மேலும், தமிழ்நாடு சட்டமன்ற நூற்றாண்டு விழா மலர், தமிழ்நாடு சட்டமன்றப் பவளவிழா, சட்டமன்ற பேரவை வைர விழா, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களது சட்டமன்ற சாதனைகள் உள்ளிட்ட நூல்களின் மென் நகல்கள் (Soft Copy) பார்வை 2–ல் காணும் 13.10.2023 நாளிட்ட கடிதம் வாயிலாக அனைத்து வகை பள்ளிகளுக்கு இவ்வலுவலக இணையதளம் மூலம் அனுப்பப்பட்டு, இந்நூல்களில் இடம்பெற்றுள்ள விவரங்கள் அடிப்படையில் மாணவர்கள் உரை நிகழ்த்திட தயார் செய்யுமாறு அனைத்து வகை பள்ளிகளின் தலைமையாசிரியர்களுக்கு தெரிவிக்கப்பட்டது.

சட்டமன்ற நாயகர் கலைஞர் அவர்களின் சட்டமன்ற சாதனைகள் குறித்து கருத்தரங்குகள் மாண்புமிகு தமிழ்நாடு சட்டமன்ற பேரவைத் தலைவர் அவர்களின் வழிகாட்டுதலின்படி நடைபெறும். எனவே, அனுப்பப்பட்ட நூல்களில் இடம்பெற்றுள்ள விவரங்களின் அடிப்படையில் உரை நிகழ்த்திட தயார் நிலையில் இருக்கும் மாணவர்கள் விவரம் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள Google Sheet Link–ல் பதிவிடுமாறு அனைத்து அரசு / அரசு நிதியுதவி பெறும் உயர் / மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பு –
https://docs.google.com/spreadsheets/d/1M3NopklvQpbnMAacjdW5sm6K02NwhDFn/edit?usp=sharing&ouid=109116692137954752089&rtpof=true&sd=true

முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

பெறுநர்
தலைமையாசிரியர்கள்,
அரசு / அரசு நிதியுதவி பெறும் உயர் / மேல்நிலைப் பள்ளிகள்,
வேலூர் மாவட்டம்.

நகல்–
மாவட்டக் கல்வி அலுவலர்,
(இடைநிலைக் கல்வி)
வேலூர் மாவட்டம்.
(தொடர் நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு)